# செயலாற்றுகை அறிக்கை - 2018

தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்

நிதி அமைச்சு

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1.0 | அறிமுகம் | 3 |
| 2.0 | தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் உபாயரீதியான நோக்கங்கள் | 4 |
| 3.0 | பிரதான பொறுப்புகள் | 5 |
| 4.0 | தகவல் தொழில்நுட்ப திணைக்களம் கொண்டுள்ள ஐந்து பிரிவுகள் | 6 |
| 4.1 | வலையமைப்பு செயற்பாட்டு நிலையத்தின் செயலாற்றுகை | 7 |
| 5.0 | தகவல் தொழில் நுட்ப பிரிவு | |
| 5.1 | கணனி வன் பொருட்கள் / பழுது பார்த்தாலும் பராமரித்தல் | 12 |
| 5.2 | கணனி வன்பொருட் கூறுகள் | 13 |
| 5.3 | மென்பொருட்கள் தயாரிப்பு | 15 |
| 53.1 | சம்பள முறைமை | 16 |
| 5.3.2 | ஒற்றைச் சாரளம் முறைமை | 19 |
| 5.3.3 | GitHub பதிப்புக் கட்டுப்பாட்டு முறைமை | 20 |
| 6.0 | ஒன்றிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (**ITMIS**) | 21 |
| 7.0 | நிதி மற்றும் நிருவாகம் மீதான செயல்திறன் | 26 |
| 8.0 | திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவு | 34 |

## 1.0 அறிமுகம்

தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களமானது ( ITMD ) நிதி அமைச்சின் பார்வையின் கீழ் 28 நொவெம்பர் 2012ம் வருடம் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி தாபிக்கப்பட்டது. ITMD ஆனது நிதி அமைச்சின் கீழ் வரும் சகல திணைக்களங்களினதும் முற்று முழுதான தன்னியக்க செயற்பாடுகளுக்குப் பொறுப்பானதாக இருக்கும். தகவல் தொழில் நுட்ப முறைமைகளை உருவகப்படுத்துதலும், பராமரித்தலும் மற்றும் திறைசேரியின் திணைக்களங்களுக்கான கணனி வன்பொருட்களின் பராமரிப்பையும் தகவல்களுக்கான ஏற்பாடுகளையும் வழங்குதல் என்பன இத் திணைக்களத்தின் முக்கிய பொறுப்புகளாகும். இணைய தளத்தினை மீள் உருவகப்படுத்துவதிலும் உள்ளக வலைப்பின்னல்களை மேம்படுத்துவதிலும் இத் திணைக்களம் தனது கவனத்தினை செலுத்தும்.

ஒன்றிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை ( ITMIS ) செயல் திட்டம் எதிர்வரும் 2019 இல் நிதியமைச்சில் செயல்படுத்தப்பட இருக்கிறது. ஒரு தடவை இச் செயல் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால் இம் முறைமையினை வெற்றிகரமான நடைமுறைப்படுத்துவதற்கு நிதி அமைச்சானது தகவல் தொழினுட்ப பிரிவினை முழுமையாக தொடர்ந்து பேணுவது அவசியமாகின்றது.

தரவு மற்றும் தகவல் என்பனவற்றிக்கான கேள்விகள் உயர்வாகக் காணப்படுகின்றன, ஆனால் அவற்றை அணுகுவதற்கான வழிகள் மட்டுப்படுத்தப்பட்டனவையாகவே உள்ளன. நிதிக் கொள்கைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் வேளையில் தகவல் தொழில் நுட்ப முகாமைத்துவ திணைக்களமானது தகவல் மற்றும் தொடர்பாடல் நுட்பங்களை பயன்படுத்தி ஒழுங்குபடுத்துதலையும், எளிதாக்குதலையும் மற்றும் உருவகப்படுத்துதலின் போது தீர்மானங்களை மேற்கொள்ளுவதற்கு உதவியளிப்பதற்கும் அவற்றை நிறைவேற்றிக்கொள்ளுவதற்கும் கடதாசியற்ற செயற்பாடுகளை முன்னிலைப்படுத்தி உலகத்தரமான வர்த்தக மையத்தினை அடைய வழிசெய்கிறது.

## 2.0 தொலைநோக்கு

துரித பொருளாதார வளர்ச்சிக்காக முழுமையான தன்னியக்க முறையினைக் கொண்ட நிதி மேலாண்மை

## பணிக்கூற்று

நிதிக் கொள்கைகளைத் திட்டமிடுதல், நடைமுறைப்படுத்தல், மற்றும் மதிப்பீடுசெய்தல் ஆகியவற்றுக்கான தீர்மானங்களை எடுக்கும் பணியை இலகுபடுதல் மற்றும் கடதாசியற்ற வேலைச் சூழலோன்றை மேம்படுத்தும் பொருட்டு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு மற்றும் தகவல் மூலங்களை வழங்குதல், கூட்டிணைத்தல் மற்றும் வசதியளித்தல்.

## உபாயரீதியான நோக்கங்கள்

- நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சகல திணைக்களங்களுக்கும் தன்னியக்க முறைகள் மற்றும் நடைமுறைகள் என்பனவற்றை உறுதிப்படுத்துதல்.
- தீர்மானம் எடுக்கும் அமைப்புகளுக்கு முகாமைத்துவத் தகவல்களை வழங்குதல்.
- பொதுமக்கள் திறைசேரியின் தகவல்களை இலகுவாகப் பெறுவதனை உறுதிப்படுத்தல் .
- ஏனைய திணைக்களங்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

## 3.0 பிரதான பொறுப்புக்கள்

- ஒன்றிணைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவற்றை முழுநிறைவு செய்வதற்கேற்றவகையில் தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தை மீள்கட்டமைப்பு செய்தல்.
- அமைச்சுக்கான அனர்த்த மீட்புத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துதல்.
- திறைசேரிக்கான தகவல் தொழில்நுட்ப பாதுகாப்புக் கொள்கையினை அறிமுகப்படுத்துதல்.
- தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்திற்கான வணிகத் தொடர்ச்சித் திட்டத்தினை அறிமுகப்படுத்தல்.
- தற்போதுள்ள தொடர்பாடல் வலைப்பின்னலின் கொள்ளளவினை மேம்படுத்துதல்.
- திறைசேரியின் திணைக்களங்களில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயன்பாட்டினை உறுதிப்படுத்தல்
- ஒற்றைச் சாரள முறைமையினை சர்வதேச வர்த்தகத்தின்பால் நடைமுறைப்படுத்துவதற்கேற்றவகையில் கூட்டிணைத்தல்.

- ஊழியர்களின் திறன் அபிவிருத்தியை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் மேம்படுத்தல்.

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளங்களின் வினைத்திறனான பாவனைக்கு அவற்றிக்கான பராமரிப்பு உதவிகளை உறுதிப்படுத்தல்.

## 4.0 தகவல் தொழில்நுட்ப திணைக்களம் கொண்டுள்ள ஐந்து பிரிவுகள்

1. வலையமைப்புச் செயற்பாட்டு நிலையம்
2. தகவல் தொழில்நுட்ப பிரிவு
3. ஒன்றிணைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ முறைமையின் உதவிக்கரம் FMEP
4. நிருவாகம் மற்றும் கணக்குப் பிரிவு
5. திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவு

வலையமைப்பு செயற்பாட்டு நிலையமானது இத் திணைக்களத்தின் விரிவு படுத்தப்பட்ட அலகொன்றாகும். இந்த வலையமைப்பு செயற்பாட்டு நிலையம், திறைசேரித் திணைக்களங்களின் திறன்களை வலுப்படுத்தி தேசிய பொருளாதாரம் மற்றும் நிதி கொள்கைகளை வகுப்பதற்கு ஏற்றவகையில் வலையமைப்பு வளத்திலுள்ள 1200 இற்கு மேற்பட்ட கணணிகள், அச்சுப்பொறிகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட கருவிகள் என்பனவற்றை முகாமைத்துவம் செய்கிறது.

## 4.1 வலையமைப்பு செயற்பாட்டு நிலையத்தின் செயலாற்றுகை

அட்டவணை - 01. 2018 இல் நிறைவேற்றப்பட்ட பணிகள்.

| திணைக்களங்கள் | செயல்நிலை கோப்பு (புதியவை) | செயல்நிலை கோப்பு (மாற்றப்பட்டவை) | செயல்நிலை கோப்பு (அழிக்கபட்டவை) |
|---|---|---|---|
| அபிவிருத்தி நிதித் திணைக்களம் | 12 | 1 | 0 |
| கணக்காய்வாளர் முகாமைத்துவ திணைக்களம் | 7 | 1 | 3 |
| அரசிறைக் கொள்கைகள் திணைக்களம் | 7 | 3 | 0 |
| தகவல் தொழில் நுட்ப முகாமைத்துவ திணைக்களம் | 4 | 1 | 1 |
| சட்ட அலுவல்கள் திணைக்களம் | 0 | 0 | 0 |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 3 | 2 | 2 |
| தேசிய வரவு செலவு திட்டத் திணைக்களம் | 9 | 3 | 9 |
| தேசிய திட்டமிடல் திணைக்களம் | 5 | 1 | 2 |
| பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் | 8 | 2 | 7 |
| அரச கணக்குகள் திணைக்களம் | 7 | 1 | 6 |
| வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களம் | 14 | 2 | 4 |
| திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | 5 | 0 | 1 |
| நிதி அமைச்சு | 31 | 9 | 6 |
| மொத்தம் | 112 | 26 | 41 |

AD - Active Directory-- செயல்நிலை கோப்பு

அட்டவணை 02 .   2018 காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட / மாற்றப்பட்ட மற்றும் நீக்கப்பட்ட இ - மெயில்கள் கணக்குகள்

| **திணைக்களங்கள்** | **உருவாக்கப்பட்ட புதிய இ - மெயில்கள்** | **திருத்தம் செய்யப்பட்ட இ - மெயில்கள்** | **நீக்கப்பட்ட இ - மெயில்கள்** |
|---|---|---|---|
| அபிவிருத்தி நிதித் திணைக்களம் | 8 | 1 | 0 |
| கணக்காய்வாளர் முகாமைத்துவ திணைக்களம் | 7 | 1 | 3 |
| அரசிறைக் கொள்கைகள் திணைக்களம் | 6 | 3 | 0 |
| தகவல் தொழில் நுட்ப முகாமைத்துவ திணைக்களம் | 2 | 1 | 1 |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 3 | 2 | 2 |
| தேசிய வரவு செலவு திட்டத் திணைக்களம் | 9 | 3 | 9 |
| தேசிய திட்டமிடல் திணைக்களம் | 5 | 1 | 2 |
| பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் | 8 | 2 | 7 |
| அரச நிதித் திணைக்களம் | 9 | 2 | 0 |
| அரச கணக்குகள் திணைக்களம் | 8 | 1 | 6 |
| வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம் | 14 | 2 | 4 |
| திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | 5 | 0 | 1 |
| நிதி அமைச்சு | 37 | 9 | 6 |
| **மொத்தம்** | **121** | **28** | **41** |

அட்டவணை 03 . 2018 காலப்பகுதியில் மீள் வடிவமைக்கப்பட்ட மற்றும் இற்றைப் படுத்தப்பட்ட திறைசேரியின் வலைப் பக்கம்

| **திணைக்களம்** | **நிறைவேற்றப்பட்ட இலக்குகள்** |
|---|---|
| அபிவிருத்தி நிதித் திணைக்களம் | 20 |
| அரசிறைக் கொள்கைகள் திணைக்களம் | 170 |
| கணக்காய்வாளர் முகாமைத்துவ திணைக்களம் | 38 |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 28 |
| தேசிய வரவு செலவு திட்டத் திணைக்களம் | 45 |
| அரச நிதித் திணைக்களம் | 83 |
| திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | 69 |
| வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களம் | 97 |
| தகவல் தொழில் நுட்ப முகாமைத்துவ திணைக்களம் | 28 |
| பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் | 16 |
| சட்ட அலுவல்கள் திணைக்களம் | 8 |
| அரச நிதித் திணைக்களம் | 56 |
| கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகம் | 16 |
| நிதி அமைச்சு | 43 |
| கௌரவ. அமைச்சரின் ஊடக பிரிவு | 186 |
| திணைக்களம் சாரதாவை | |
| உள்ளக வலை கட்டமைப்பு ( இன்றானெற்) | 63 |
| பிற | 76 |
| **மொத்தம்** | **1042** |

அட்டவணை 04 . 2018 காலப்பகுதியில் தகவல் தொழில் நுட்ப முறைமை / நிதி அமைச்சின் உட்கட்டமைப்பு என்பனவற்றில் நிறைவேற்றப்பட்ட இலக்குகளின் விபரம்

| நிறைவேற்றப்பட்ட இலக்குகளின் விபரம் | எண்ணிக்கைகள் |
|---|---|
| ஆளி கட்டமைப்பும் முகாமையும் - கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகம் | 1 |
| ஆளி கட்டமைப்பும் முகாமையும் - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 1 |
| ஆளி கட்டமைப்பும் முகாமையும் - வலையமைப்பு செயற்பாட்டு நிலையம் | 2 |
| ஆளி கட்டமைப்பும் முகாமையும் - பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் | 1 |
| ஆளி கட்டமைப்பும் முகாமையும் - அறை இலக்கம் 401 | 1 |
| ஆளி கட்டமைப்பும் முகாமையும் - தபால் பிரிவு | 1 |
| ஃபயர்வால் HA கட்டமைப்பும் முகாமையும் | 1 |
| புதிய சேமிப்பகம் நிறுவுதல் | 4 |
| செயல்நிலை கோப்பக முகாமையும் முன்னுரிமைப்படுத்தலும் | 1 |
| ஆளி கட்டமைப்பு மற்றும் ISO கோப்புகளை TFTP சேவையகத்தை பயன்படுத்தி நகல் காப்பு செய்தல் | 6 |
| ARUBA Wi-Fi அணுகல் கட்டுப்பாட்டை முகாமைசெய்தல் மற்றும் உருவாக்கப்பட்ட 20 பயன்பாட்டாளர் குழு | 1 |

ஆளி கட்டமைப்பு - Switch Configuration
சேமிப்பகம் - Servers

## மேலதிகமாக நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்.

1. வலை அமைப்பு கணக்காய்வு நிகழ்ச்சியை நடைமுறை படுத்தியது மற்றும் நிதி அமைச்சின் தற்போதைய வலை அமைப்பு முறைமையை அடையாளம் கண்டு புதிய முறைமையொன்றின் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
2. குத்தகை வழித்தடத்தைக் கண்காணித்து நிதி அமைச்சின் 30 திசைவிகள் முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளன.
3. 250 இற்கும் மேற்பட்ட நுழைவாயில் அணுகற் பாதுகாப்பு அட்டைகள் நிதி அமைச்சின். உத்தியோகத்தர்களுக்கு அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன.
4. நிதி அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு 121 LGN பயனாளிகளின் கணக்குகள் உருவாக்கி வழங்கப்பட்டுள்ளன.

**நிதி அமைச்சின் உள்ளக வலைக் கட்டமைப்பு**

1. புதிய உள்ளக வலைக் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்ட பதிப்பினால் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் தகவல்

   தொழில் நுட்ப திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

2. உள்ளக தொடர்பாடல்களுக்கு உள்ளக வலைக் கட்டமைப்பு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

## 5.0 தகவல் தொழில் நுட்ப பிரிவினால் நிறைவேற்றப்பட்ட இலக்குகள்

### 5.1 கணனி வன் பொருட்கள் / பழுது பார்த்தாலும் பராமரித்தல்:

கணனி தொடர்பான பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு சிறிய மற்றும் பெரிய சிக்கல்கள் முடிவுறுத்தப்பட்டன.

முறைமைகள் மேம்படுத்தப்பட்டும், நகல் காப்பும் ஒரு வழக்கமான அடிப்படையில் செய்யப்பட்டது.

கணனி வன் பொருட்கள் என்பன பௌதீகமானதும் கையாளக்கூடியதுமான கூறுகளாகும். அவை கண்ணால்

பார்க்கக்கூடியவையும் தொடக்கூடியனவாகவும் உள்ளன.

உதாரணமாக வன்பொருட்கள் பின்வருமாறு அமையும்:

- உள்ளீடு சாதனங்கள் : விசைப்பலகை, சுட்டி போன்றவை.
- வெளியீடு சாதனங்கள் : அச்சுப்பொறி, திரை போன்றவை.
- இரண்டாம் நிலை சேமிப்பு சாதனங்கள்: வன் தட்டு, நிலை நினைவகம், இறுவட்டு, DVD போன்றவை.
- உள்ளக கூறுகள் : மதர் போர்டு, RAM போன்றவை.

## 5.2 கணனி வன்பொருட் கூறுகள்



அட்டவணை 05 .   2018 காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்ட வன்பொருட் பராமரிப்பு வேலைகள்.

| **செயற்பாடுகள்** | **முடிவுறுத்தப்பட்ட இலக்குகள் எண்ணிக்கை** |
|---|---|
| உள்ளக கணனி பழுது பார்த்தல்கள் ( பெரிய பழுதுகள்) | 780 |
| தளத்தில் பழுது பார்க்கப்பட்ட கணனிகள் மற்றும் இணைய மின்னஞ்சல் தொடர்பான சிக்கல்களின் தீர்வுகள் ( சிறிய பிரச்சனைகள்) | 1007 |
| பழுதுபார்க்கப்பட்ட அச்சுப்பொறிகள் , UPS என்பன | 715 |
| 'விண்டோஸ்' களை மேம்படுத்தல் மற்றும் தேவையற்ற மென்பொருட்களை அகற்றல் | 360 |
| திறைசேரியின் பழைய கணனிகளை சேகரித்தல் மற்றும் அவற்றுக்காக புதியனவற்றை மாற்றீடு செய்தல் | 200 |
| கணணிகளுக்கு விளக்க குறியீடு இடல் | 203 |
| திறைசேரியின் அனைத்து திணைக்கள கணணிகளுக்கும் வைரஸ் ( நச்சு நிரலி ) காப்புகளை மேம்பாடுசெய்தல் | 350 |

## 5.3 மென்பொருட்கள் தயாரிப்பு

திறைசேரியின் திணைக்களங்கள் தன்னியக்க செயற்படடின் மூலம் அதி வினைத்திறனானதும் வினையாற்றலுடன் கூடியதுமான சேவைகளை வழங்குவதற்காக மென்பொருட்களை தயாரிக்கவும் புதிய தகவல் தொழிநுட்ப முறைமைகளை அறிமுகப்படுத்தவும் வேண்டியுள்ளது. ஒருதடவை புதிய முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பரிசோதிக்கப்படால், அது அந்த நிறுவனத்தில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட வேண்டியுள்ளது. இதன் போது பயன்பாட்டாளர்களை பயிற்றுவித்தல், ஆவணங்கள் வழங்குதல், முன்னர் இருந்த எவ்வாறான முறைமைகளையும் புதிய முறைமைக்கு மாற்றுவித்தல் என்பனவும் அடங்கும். செயற்பாடிற்கு வரும் போது நடைமுறைப்படுத்தலானது பல வழிமுறைகளை கொண்டதாகும். அது முறைமைகளின் தன்மையிலும், முன்னைய முறைமைப் பயன்பாட்டாளர்களின் தன்மையிலும், எண்ணிக்கையிலும் தங்கியிருக்கும்.

**பின்வரும் செயற்பாடுகள் மென்பொருள் தயாரிப்பில் உள்ளடங்குகின்றன.**

1. கணனி நிரலாக்க கோட்பாடுகள் மாற்று கணனி நிரலாக்க மொழிகள்
2. கணனி கணக்கீட்டு சிக்கல்கள் ( சிக்கல்களை சிறு கூறாக்கி தீர்வுகாணல் , கருப்பொருள், வரிசைப் படுத்துதல் , கிளைப்படுத்துதல்.)
3. வகுப்புகள், பொருட்கள், மாறிகளை, பெறுமானங்களை, வகைகள், கணித செயல்பாடுகள், குறியீடுகளின் கட்டுப்பாடும் முறைகளும்.
4. உருவகப்படுத்துதலும், அதனை காட்சியாக்குதலும், பாவனைக்கு தகுதியாக்கலும்.

### 5.3.1 **சம்பள முறைமை**

சம்பள முறைமை மிகவும் நம்பகமானது. இது நிதி அமைச்சின் தனிப்பட்ட தேவைக்கேற்ற வகையில் வடிவமைக்கப்பட்டடுள்ளதுடன் பின்வருவானவற்றிற்கும் முற்றுமுழுதான தீர்வாகவும் அமைந்துவிடுகின்றது அவையாவன சம்பளம், வேதனம், கொடுப்பனவுகள், கழிவுகள், மற்றும் சம்பள பட்டியல், கொடுப்பனவுச் சிட்டைகள் EPF/ETF/PAYE அறிக்கைகள் போன்ற பொருத்தமான முழு அறிக்கைகளைத் தயாரித்தலாகும்.

சம்பள முறைமையானது வங்கி மற்றும் EPF/ETF இலத்திரனியல் பரிமாற்றம் என்பனவற்றிற்கும் வசதியளிக்கிறது. சம்பள முறைமையானது வாரக்கணக்கான நேரத்தினையும், ஆற்றலையும் பணத்தினையும் மிச்சப்படுத்துகின்ற அதேநேரம் நடைமுறைத் தவறுகளால் ஏற்படும் இடர்களையும் குறைக்கின்றது

**சம்பள முறைமையின் கூறுகளும் அதன் பலாபலன்களை**

1. இந்த முறைமையினைப் பல நிறுவனங்களுக்கு பயன்படுத்த முடியும்.
2. உத்தியோகத்தர்களின் தகவல்களைத் திணைக்களம், வகுப்பு, பதவி, உத்தியோகத்தர்களின் வகை, தொழில் வகை ரீதியாக வகைப்படுத்துதல்.
3. அடிப்படை சம்பளம் - மாதாந்தம், விருப்பு வரையறுக்கப்பட்டவை.
4. கொடுப்பனவுகள், கழிவுகள்- நிலையானவை, மாறக்கூடியவை.
5. ஊழியர் கடன் பராமரிப்பு மற்றும் திருப்பி செலுத்துதல் .
6. சுய கணிப்பீடுகள்- OT, EPF, ETF, PAYE, முத்திரைத் தீர்வை.
7. பயனர்கள் மற்றும் அனுமதிகள்
8. பல் பயனர் அணுகும் வசதி
9. அதிகரிப்புகளும் கழிவுகளும்.
10. சம்பளமற்றவை, தாமதம்,சம்பள முற்பணம்
11. காப்பு நகல் எடுத்தல் மற்றும் மீளமைத்தல் வசதிகள்

**சம்பள முறைமை ஊடாக தயாரிக்கப்படக்கூடிய அறிக்கைகள்**

1. சம்பள பட்டியல், கொடுப்பனவு சிட்டைகள்
2. சம்பள முறைமைச் சுருக்கம் ( நியமமானது, திணைக்கள ரீதியாக, வகுப்பு ரீதியாக, தொழில் ரீதியாக )
3. நாணயம் ( சுருக்கம், விபரம்)
4. சம்பளமுற்பணம், மேலதிக நேர கொடுப்பனவு, தாமத வருகை கழிவுகள்,உத்தியோகத்தர் ரீதியான சம்பள விபரம்.
5. கொடுப்பனவுகள், நிலையான கொடுப்பனவுகள், கழிவுகள், நிலையான கழிவுகள், சம்பள உயர்ச்சி.
6. கையெழுத்துப் படிவம்,வங்கிப் பரிமாற்றம்.
7. கடன் சுருக்கம், கடன் மீதி, ஊழியர் ரீதியான கடன் விபரம், கடன் தீர்ப்பனவு.
8. C படிவம், R4 படிவம், படிவம் C3 திரும்பல், படிவம் II திரும்பல், PAYE வரி, T-9A, T-10, முத்திரைத் தீர்வை.
9. தனித்துவமான அறிக்கையிடுதலுக்கூடாக பலவிதமான அறிக்கைகள்.

**நிதி அமைச்சுக்கான இலத்திரனியல்- சம்பள முறைமை**

இம் முறைமையானது 90 % அளவில் நிறைவு செய்யப்பட்டடுள்ளது. மேலும் இம் முறைமையானது பின்வரும் திணைக்களங்களில் பெப்ருவரி 2019 அளவில் வெள்ளோட்டம் செய்யப்பட திட்டமிடப்பட்டடுள்ளது.

1. தகவல் தொழில் நுட்ப முகாமைத்துவ திணைக்களம்
2. முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம்
3. அரச கணக்குகள் திணைக்களம்
4. சட்ட அலுவல்கள் திணைக்களம்.

ஏனைய திணைக்களங்களுக்கான இச் சம்பள முறைமையின் வெள்ளோட்டமானது மேற்கூறப்பட்ட நான்கு திணைக்களங்களுக்குமான வெள்ளோட்டம் முடிவடைந்ததன் பின்னர் நிகழ்த்தப்படும். இலத்திரனியல் சம்பள முறைமையின் மென்பொருனது Hsenid Business Solution (Pvt ) Ltd நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்டடுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு 2018 இல் இதனை நிறைவு செய்து வழங்கியமைக்காக இரு தவணைகளில் ஆக 2.1 மில்லியன் ரூபாய்கள் செலுத்தப்பட்டடுள்ளது. மூன்றாம் தவணை கொடுப்பனவினை செலுத்துவதற்காக 14 மில்லியன் ரூபாய்களை விரைவில் விடுவிப்பதற்கான வேண்டுகோளிகாக இதன் கட்டமைப்பு தொடர்பான ஆவணம் தகவல் தொழிநுட்ப முகாமைத்துவ திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நிதியமைச்சின் 14 திணைக்களங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இம் முறைமையினைப் பயன்படுத்தும் வகையில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளார்கள்.

1. மேம்படுத்துகை -- இம் முறைமையின் தயாரிப்பின் போது அடையாளம் காணப்பட்ட 32 சிக்கல்களும் மற்றும் புதிய மேம்படுத்துகைக்கான பரப்புகள் என்பனவும் இணைத்துக்கொள்ளப்பட்டன. தற்போது அனைத்து மேம்படுத்துகைகளும் நிறைவு படுத்தப்பட்டடுள்ளன.
2. பாயிற்சிகள் - நிதியமைச்சின் ( 14 திணைக்களங்கள்) பயன்பாட்டாளர்களுக்கு சம்பள முறைமையில் உள்ள சகல மட்டுளிகள் தொடர்பான பயிற்சி நெறிகளும் வழங்கப்பட்டுள்ளன. இற்றைப் படுத்தப்பட்ட பயன்பாட்டாளர்களின் தேவைப்பாடுகளுக்கேற்றவகையில் நிதியமைச்சின் ஒவ்வொரு பயன்பாட்டாளர்களும் பாயிற்சியளிக்கப்பட்டும் உள்ளார்கள்.
3. இம் முறைமையானது 31.12.2018 இல் வெள்ளோட்டம் விடப்படுவதற்கு ஆயத்தமாக உள்ளது.

### 5.3.2 "ஒற்றைச் சாரளம்" முறைமை

இலங்கை நியமங்கள் நிறுவனம் ஆனது 26 நொவெம்பர் 2018 இல் ஒற்றை சாரள முறைமையை ஆரம்பித்திருந்தது. இதன் பின்னர் ஏறக்குறைய 4000 இறக்குமதியாளர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை இம் முறைமையின் ஊடக சமர்பித்திருந்தார்கள்.இந்த முறைமையானது சுங்கத்திணைக்களத்தின் "Asycuda" முறைமையுடன் இணைக்கப்பட்டடுள்ளது. தற்போது இந்த முறைமையானது **LGC I** இல் இருந்து மேலும் திறமை மிக்க **LGC II** இற்கு மாற்றப்பட தயாராக உள்ளது.

தேசிய தாவர தனிமைப்படுத்தப்பட்ட சேவைகள் திணைக்களத்தின் (NPQS) இணையவழி முறைமையானது 50% வரை நிறைவு செய்யப்பட்டுள்ளது மேலும் இது அடுத்த சில மாதங்களில் நிறைவுறுத்தப்படும். தேசிய தாவர தனிமைப்படுத்தப்பட்ட சேவைகள் திணைக்களத்திடமிருந்து கருத்துக்கள் மற்றும் மேலும் அவர்களின் தேவைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தல் நிகழ்வு ஒன்று செய்து காண்பிக்கப்பட்டது.

தேசிய தாவர தனிமைப்படுத்தப்பட்ட சேவைகள் திணைக்களத்தின் (NPQS) மற்றும் கைத்தொழில் அமைச்சு ஆகியவற்றுக்கான இணையவழி முறைமையானது தற்போது தயார்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. NPQS இன் முறைமையானது நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் நடைமுறைக்கு வர எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.3.3 GitHub பதிப்புக் கட்டுப்பாட்டு முறைமை

GitHub பதிப்புக் கட்டுப்பாட்டு முறைமையானது தகவல் தொழில் நுட்ப திணைக்களத்தின் மூலம் 2017 இல் $ 25 செலவில் திறைசேரித் திணைக்களங்களுக்கான மூலகக் குறியீடுகளை பாதுகாப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டது. திறைசேரி, நிதி அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு இம் மூலக குறியீட்டுப் பாதுகாப்பின் பிரயோசனங்கள் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டடிருப்பதுடன் அவர்களின் கணனியின் மூலக் குறியீடுகளை GitHub இற்கு செலுத்துவதற்கு கவனம் எடுக்குமாறும் தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் முறைமைகளுக்கான மூலக் குறியீடுகள் GitHub பதிப்புக் கட்டுப்பாடு முறைமையின் மூலம் பாதுகாக்கப் பட்டுள்ளன.

1. ஒற்றைச் சாரள முறைமை
2. இலங்கை நியமங்கள் நிறுவனம்
3. பொது முயற்சிகள் திணைக்களத்தின் தகவல் முறைமை
4. நிதி அமைச்சின் இலத்திரனியல் சம்பள முறைமை

## 6.0 ஒன்றிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (ITMIS)

ஒன்றிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையின் அறிமுகமானது திறைசேரி, நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் திணைக்களங்களின் தன்னியக்க செயற்பாடுகளையும் பொது திறைசேரியின் பலதரப்பட்ட செயற்பாடுகளைக் குறைத்து வருமான நிருவாகத்திலும் ஒன்றிணைக்கப்பட்ட திறைசேரியின் நடவடிக்கைகளிலும் திருத்தமானதும் வினைத்திறனுமான முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்தும்.

உலகளாவிய நாடுகள் நிதி நிருவாக சீர்திருத்தங்களை மேற்கொள்ளும்போது தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் ஓர் பிரதான உறுப்பாக காணப்படுகிறது. இது பொது நிதியை நிர்வகிப்பதற்கான பயனுள்ள வழிகளையும் வழங்குகிறது. அரச நிதி முகாமைத்துவதில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தினை செயல்படுத்துவதில் ஏற்கனவே நல்ல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மேலும் நிதியமைச்சின் சில செயற்பாடுகளின் குறித்த தேவைகளை பூர்த்திசெய்வதற்காக பல முறைமைகளை நடைமுறைப்படுத்தியுமுள்ளது. இந்த முறைமைகளில் அநேகமானவை இரண்டு அடுக்கு கட்டமைப்பில் உருவாக்கப்பட்டடுள்ளன. இவ் உருவாக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பமானது தற்போது முற்றுமுழுதாக வழக்கற்று உள்ளது.

இந் நாட்டில் அரச நிதி முகாமைத்துவத்தின் முழு வாழ்க்கைச் சுழற்சிக்கும் ஒத்துழைக்க தனித்த மற்றும் ஒருங்கிணைந்த தகவல் முறைமையை உருவாக்குவதன் நோக்கமாக முன்மொழியப்பட்ட ITMIS முயற்சியானது (i) திட்டமிடல் (ii) பாதீடு (iii) செலவு மற்றும் வருமான முகாமைத்துவம் (iv) கணக்காய்வு மற்றும் அறிக்கையிடல் (v) கடன் அறிக்கை போன்றவை உள்ளடக்குகிறது.

ITMIS ஐ நடைமுறைப்படுத்துவதன் மூலம் முன்மொழியப்பட்டிருக்கின்ற நிதியமைசினதும் செலவீன அலகுகளினதும் முக்கிய செயல்பாடுகளை தகவல் தொழில் நுட்பத்திற்கூடாக அடையக் கூடியதாக இருக்கும். அவற்றுள் பின்வருவனவும் அடங்கும்.

மேலே குறிப்பிடப்பட்ட நடைமுறையில் இருக்கும் முறைமைகள் தனித்து செயல்படும் வகையில் மேம்படுத்தப்பட்டடுள்ளன. இவை பங்குதாரர்களுடன் பயனுள்ள தகவல் பரிமாற்றத்துக்கு குறைந்தளவிலான வாய்ப்புகளையே தருகிறது. இவ்வகையான தனித்து செயல்படும் முறைமைகள் நாளாந்த அடிப்படையில் பங்குதாரர்களுடன் பரிமாறிக்கொண்ட தகவல்கள் குறிப்பிடத்தக்க முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

1. பாதீடு தயாரித்தல்
2. பாதீட்டு அதிகார முகாமைத்துவம்
3. கொள்வனவு மற்றும் செலவு முகாமைத்துவம்
4. திறைசேரி முகாமைத்துவம்
5. சிட்டைகள் முகாமைத்துவம்
6. நிதி முகாமைத்துவம்
7. கடன் முகாமைத்துவம் (இடை முகம்)
8. பொதுப் பேரேடு மற்றும் நிதி அறிக்கைகள்
9. நிலையான சொத்து முகாமைத்துவம்
10. ஆளணி முகாமைத்துவம்
11. உள்ளக கணக்காய்வு முகாமைத்துவம்
12. நீதிமன்ற வழக்கு கண்காணிப்பு
13. நிருவாகம்

## 2018ம் வருட காலப்பகுதியில் கொள்வனவுகள் செய்யப்பட்ட பொருட்கள்

செயல்மிகு விபரக்கொத்துக் கட்டமைப்பு மற்றும் 1000 கணனிகளை ITMS இன் செலவு செய்யும் முகவர்களுக்கு வழங்கி நிறுவியது.

- நிதி மற்றும் வெகுசன ஊடகங்கள் அமைச்சின் கணனி நகற் காப்பு, மீட்பு மற்றும் காப்பீட்டுத் தீர்வு என்பனவற்றுக்கான மென்பொருள், வன்பொருள் ஆகியவற்றை வழங்குதல், கையளித்தல், நிறுவுதல், செயற்பாட்டை உறுதிப்படுத்தல், செயற்படுதல் மற்றும் பராமரித்தல் ஆகியவை.
- நிதி மற்றும் வெகுசன ஊடகங்கள் அமைச்சின் தொலைதூர நகல் சேமிப்பகத்துக்கான சேமிப்பகத்தினை வழங்குதல், கையளித்தல், நிறுவுதல், செயற்பாட்டை உறுதிப்படுத்தல், மற்றும் பராமரித்தல்.
- நிதி மற்றும் வெகுசன ஊடகங்கள் அமைசிற்கான வடிவமைப்பு, வரைகலை, மென்பொருள் உரிமம் ஆகியவற்றைக் கொள்வனவுசெய்தல்.
- Procurement of Development Tools Software Licenses for the Ministry of Finance & Mass Media
- மூன்று 55 " LED காட்சிப் பலகைகள் சுவர் இணைப்புகளுடன் மற்றும் கண்காணிப்பு திரைகளுக்கான கணனிகள், ஒரு காட்சி எறிகருவி, 20 அனலாக் தொலைபேசிகள் என்பனவற்றை வழங்கி நிறுவுதல்.
- ITMIS இன் முக்கிய தொகுதிகளுக்கான மூன்றாம் நபர் சோதனைகள் நடத்தப்பட்டன.
- பாரிய எல்லா பிழைகளும் சீராக்கப்பட்டதன் பின்பு முக்கிய தொகுதிகள் விளக்கிவைக்கப்பட்டன.
- இடைமுக சோதனைகள் மற்றும் தரவு நகர்தல் என்பன.

**2018 காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்ட ITMIS செயல் திட்டம் தொடர்பான ஏனைய பராமரிப்பு வேலைகள்.**

- பரிமாறும் சேமிப்பகத்தின் நினைவாற்றல் 16 GB இருந்து 64 GB இற்கு உயர்த்தப்பட்டது.
- அச்சுப் பதிப்பு & நச்சுநிரல் தடுப்பி சேமிப்பகங்களின் நினைவாற்றல் 4 GB இல் இருந்து 8 GB இற்கு உயர்த்தப்பட்டது.
- Dialog இணைப்பு 8 Mbps இலிருந்து 16 Mbps இற்கு உயர்த்தப்பட்டது
- அர்ப்பணிக்கப்பட்ட சேமிப்பகம் ஒன்றைக் கொள்வனவு செய்துகொள்ளும் வரை Ca UIM & சொத்து சேமிப்பக மானது தற்காலிகமாக நிதி அமைச்சின் வலையமைப்பு செயற்பாட்டு நிலையத்தினுள் அங்குள்ள கணனியில் நிறுவப்பட்டுள்ளது.
- அர்ப்பணிக்கப்பட்ட சேமிப்பகம் ஒன்று கொள்வனவு செய்யப்படும் வரை தற்காலிகமாக Bugzila சேமிப்பகம் வலையமைப்பு செயற்பாட்டு நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளது.
- அர்ப்பணிக்கப்பட்ட சேமிப்பகம் ஒன்று கொள்வனவு செய்யப்படும் வரை தற்காலிகமாக ITMIS ஹெல்ப் நிகழ்ச்சியானது வலையமைப்பு செயற்பாட்டு நிலையத்துடன் நிறுவப்பட்டடுள்ளது.
- விசேட மென்பொருள் உரிமத்துடன் இரண்டு அர்ப்பணிக்கப்பட்ட கணனிகள் DITM இல் நிறுவப்பட்டன . குறித்த மென்பொருளை பாவிப்பதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டு இக் கணணியை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

அட்டவணை 06 2018 காலப்பகுதியில் நடாத்தப்பட்ட ITMS பயிற்சி நிகழ்வுகள்

| நிகழ்ச்சி | திகதி | பயிலுனர்கள் |
|---|---|---|
| பாதீடு திட்டமிடல் | 2018.07.19 | 70 |
| பாதீட்டு ஒதுக்கீடு | 2018.07.20 | 70 |
| பிரதான மட்டுளிகள் ( MoF ) ( 4 நாட்கள்) | 2018.12.11 - 14 | 85 |
| பிரதான மட்டுளிகள் ( MoFA ) ( 3 நாட்கள் ) | 2018.12.18 - 20 | 15 |

**4.3** அட்டவணை 07. 2018 காலப்பகுதியில் பின்வரும் கடமைகள் உதவி மையம் & உட்கட்டமைப்பினால் நிறைவேற்றப்பட்டது.

| விபரம் | எண்ணிக்கை |
|---|---|
| **சம்பவங்கள்** | **2660** |
| உதவி மையம் | 68 |
| தகவல் தொழில் நுட்ப முகாமைத்துவ திணைக்களம் | 1240 |
| நிதி அமைச்சு | 3 |

| | |
|---|---|
| வலையமைப்பு நிருவாகம் ( வலையமைப்பு செயற்பாட்டு மையம் ) | 2 |
| OPT_APP_FB ( பிரீ பலன்ஸ் செயற்பாட்டு செயலிகள்) | 559 |
| OPT_Infra (எநேபில் செயற்பாட்டு கட்டமைப்பு ) | 722 |
| வழங்குநர் | 66 |
| OPT_APP_FB | 5 |
| **வேண்டுகோள்கள்** | **1853** |
| உதவி மையம் | 50 |
| தகவல் தொழில் நுட்ப முகாமைத்துவ திணைக்களம் | 1120 |
| தகவல் தொழில் நுட்ப முகாமைத்துவ திணைக்களம் Infera | 1 |
| OPT_APP_FB ( பிரீ பலன்ஸ் செயற்பாட்டு செயலிகள்) | 331 |
| OPT_Infra (எநேபில் செயற்பாட்டு கட்டமைப்பு | 340 |
| வழங்குநர் | 10 |
| **மொத்தம்** | **4518** |

## 7.0 நிருவாகம் மற்றும் நிதி மீதான செயல்திறன்.

பணிப்பாளர் நாயகத்தினால் தலைமைதாங்கப்படும் இத் திணைக்களம் மொத்தமாக 30 உத்தியோகத்தர்களை கொண்டுள்ளது. இதன் அனுமதிக்கப்பட்ட ஆளணியானது 46 ஆகும், 2018 ம் ஆண்டிறுதியில் 17 பதவிகள் வெற்றிடமாகவும் உள்ளது. அட்டவணை 08 இல் ஆளணியின் விபரம் காட்டப்பட்டடுள்ளது. உள்ளக நிருவாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி என்பன நிருவாக பிரிவினால் கையாளப்படுகின்றன.

அட்டவணை 08: ஆளணியின் சுருக்கம் 31 .12 .2018

| பதவி | சம்பள குறியீடு | அனுமதிக்கப் பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி | வெற்றிட மாக உள்ள ஆளணி | மேலதிக ஆளணி | சேவை | தரம்/ வகுப்பு | பதவி மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | SL 3 | 1 | 1 | 0 | 0 | SLAS | விசேடம் | மூப்பு நிலை |
| மேலதிக பணிப்பாளர் நாயகம் | SL 3 | 1 | 1 | 0 | 0 | SLAS | விசேடம் | மூப்பு நிலை |
| பணிப்பாளர் | SL 1 | 2 | 1 | 1 | 0 | SLAS | I | மூப்பு நிலை |
| பிரதி/ உதவி பணிப்பாளர் | SL 1 | 1 | 0 | 1 | 0 | SLAS | II | மூப்பு நிலை |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பிரதி/ உதவி பணிப்பாளர் | SL 1 | 4 | 2 | 2 | 0 | SLICTS | III/II | மூப்பு நிலை |
| உதவி பணிப்பாளர் | SL 1 | 1 | 1 | 0 | 0 | SLPS | III | மூப்பு நிலை |
| உதவி பணிப்பாளர் ( விசேட செயல்திட்டம் ) | SL1 | 1 | 0 | 1 | 0 | Departmental | III | மூப்பு நிலை |
| கணக்காளர் | SL1 | 2 | 0 | 2 | 0 | SLACS | | மூப்பு நிலை |
| நிருவாக உத்தியோகத்தர் | MN 7 | 1 | 1 | 0 | 0 | PMAS (Supra) | | மூன்றாம் நிலை |
| தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப அதிகாரி | MN6 | 6 | 3 | 3 | 0 | SLICTS | 2-II/I | மூன்றாம் நிலை |
| மொழிபெயர்ப்பாளர் | MN6 | 1 | 1 | 0 | 0 | TS | II/I | மூன்றாம் நிலை |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | MN4 | 4 | 3 | 1 | 0 | DOS | III/II/I | இரண்டாம் நிலை |
| விஞ்ஞான தொழில் நுட்ப உத்தியோகத்தர் | MN4 | 0 | 1 | 0 | 1 | Departmental | | இரண்டாம் நிலை |
| தகவல் தொடர்பாடல் | MT1 | 5 | 3 | 2 | 0 | SLICTS | 3-III/II/I | இரண்டாம் நிலை |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தொழில் நுட்ப உதவியாளர் | | | | | | | | |
| பொது முகாமைத்துவ உதவியாளர் | MN2 | 6 | 5 | 1 | 0 | PMS | III/II/I | இரண்டாம் நிலை |
| சாரதி | PL3 | 3 | 1 | 2 | 0 | DS | III/II/I/ விசேடம் | ஆரம்ப நிலை |
| அலுவலக பணியாளர் | PL1 | 5 | 4 | 1 | 0 | OES | III/II/I/ விசேடம் | ஆரம்ப நிலை |
| சிரேஷ்ட விசேட தகவல் தொழில் நுட்பவியலாளர் - முறைமைகள் மேம்பாடு | | 1 | 1 | 0 | 0 | | | ஒப்பந்தம் |
| சிரேஷ்ட விசேட உட்கட்டுமான மேம்பாட்டாளர் | | 1 | 1 | 0 | 0 | | | ஒப்பந்தம் |
| மொத்தம் | | 46 | 30 | 17 | 1 | | | |

**பயிற்சி நிகழ்வுகள்**

அட்டவணை 09 - 2018 இல் உள்நாட்டுப் பயிற்சி நிகழ்வுகள் / ஆய்வரங்குகள் என்பனவற்றில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்கள்.

| இல. | நிகழ்ச்சி | நாட்கள் | இடம் | பங்குபற்றுபவர்கள் எண்ணிக்கை | பதவி |
|---|---|---|---|---|---|
| 1 | திட்ட முகாமைத்துவம் & முன்மொழிவு எழுதுதல் | 02 | MILODA | 01 | DO |
| 2 | நிபுணத்துவ விளக்கக் காட்சி உத்திகள் பொது பேச்சு திறன்கள் | 03 | MILODA | 02 | AD,ICT Asst |
| 3 | பொது பெறுகை முகாமைத்துவத்தின் சாரம் | 03 | MILODA | 03 | DD,AD,DO |
| 4 | அடிப்படை அறிக்கை எழுதும் உத்திகள் | 03 | MILODA | 01 | ICT Asst |
| 5 | கேள்வி பத்திரங்களும் கேள்வி நடைமுறைகளும் | 03 | MILODA | 01 | MA |
| 6 | பொது துறையில் ஒழுக்காற்று நடைமுறைகள் | 02 | MILODA | 02 | AO,MA |
| 7 | MS Access பயன்படுத்தி தரவு அணுகல் முகாமைத்துவம் | 03 | MILODA | 06 | DD,DO,ICT Off,<br>ICT Asst (2),MA |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | கோப்பு முகாமைத்துவம் & பொது அலுவலக முகாமைத்துவம் , தாபனக்கோவை | 03 | MILODA | 03 | MA |
| 9 | முகாமைத்துவ உதவியாளருக்கான ICT | 02 | MILODA | 01 | MA |
| 10 | விசேட தர உத்தியோகத்தர்களுக்கான பேச்சு வடிவமைப்புப் பயிற்சி - டோஸ்மாஸ்டர் சர்வதேசம் | ஒவ்வொரு திங்கள் கிழமையும் | SLIDA | 01 | ADG |
| 11 | தொழில் நோக்கான SLIDA ஆங்கிலச் சான்றிதழ் படிப்பு, ( CEEP ) | ஒவ்வொரு திங்கள் கிழமையும் | SLIDA | 01 | MA |
| 12 | விழிப்புணர்வும் நடத்தையும்- பயிலரங்கு. | 01 | SLIDA | 01 | AD(IT) |
| 13 | பொது நிதி ஒழுங்குவிதிகள் | 03 | MILODA | 02 | MA |
| 14 | கட்டற்ற பயிற்சிகள் -- 2018 | 02 | | 25 | DG,ADG,DD,AD,AO, Translator, ICTO(2),SO,DO(3), ICTA(3), MA(5),Driver, KKS(4) |
| 15 | தடைதாண்டல் பரீட்சையில் விலக்கழிக்கப்பட்ட பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் 1 உத்தியோகத்தர்களுக்கான பாடநெறி. | 10 | | 02 | MA |
| 16 | தொழில் நோக்கான SLIDA ஆங்கிலச் சான்றிதழ் படிப்பு, ( CEEP ) | 09 மாதங்கள் | MILODA | 01 | MA |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | முறையான கடிதம் வரைதல் திறன் | 03 | MILODA | 01 | MA |
| 18 | கேள்வி பத்திரங்களும் கேள்வி நடைமுறைகளும் | 03 | MILODA | 01 | STO |
| 19 | கணக்காய்வும் ஐயா வினாக்களுக்கு பதிலளித்தலும் | 03 | MILODA | 01 | MA |
| 20 | MS Excel திறன் | 02 | MILODA | 01 | MA |
| 21 | தமிழ் மொழி | 50 மணித்தியால ங்கள் | அரசகரும மொழிகள் திணைக்களம் | 03 | MA,KKS, சாரதிகள் |
| 22 | ITMIS | 04 | MILODA | 01 | ICTO |
| 23 | சிஸ்கோ சான்றிதழ் - வலையமைப்புகளின் கூட்டிணைப்பு | 04 மாதங்கள் | ESOFT Metro Campus | 10 | AD,ICTO(2),SO,PO DO(2), ICTA(2) |
| 24 | சிஸ்கோ சான்றிதழ் - வலையமைப்பு நிபுணத்துவம் | இணையவழி | The Great lake Holding | 01 | DO |
| 25 | டிப்ளமோ சான்றிதழ்- அரச பெறுகையும் ஒப்பந்த நிருவாகமும் | 01 வருடம் | MILODA | 01 | AD(P) |

**வெளிநாட்டுப் பயிற்சிகள்**

அட்டவணை 10 - 2018 காலப்பகுதியில் வெளிநாட்டுப் பயிற்சிகளில் ஆய்வரங்குகளில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்கள்

| இல. | நிகழ்ச்சி | பெயர் | பதவி | நாடு | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| 1 | அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான தெற்கு---தெற்கு ஒத்துழைப்பு ஆய்வரங்கு. | திருமதி. எஸ்.ஏ. ஜி.சி . ஜயசேகர | DO | சீனா | 10 - 30 ஜூலை 2018 |
| 2 | வலையமைப்புத் தொழில்நுட்பத்தின் நாளைய தலைமுறையும் எதிர்காலப் போக்கும் | திரு. ஏ.சி . கருணாரத்ன | ICTO | இந்தியா | 20 ஆகஸ்ட் - 12 அக்டோபர் |
| 3 | அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் உத்தியோகத்தர்களுக்கான சீனா மொழி ஆய்வரங்கு. | திரு. டபில்யு .டபில்யு .கே . பெரேரா | ICTO | சீனா | 07 - 27 செப்டம்பர் 2018 |
| 4 | அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான உல்லாசபிரயாண அபிவிருத்தி ஆய்வரங்கு. | திரு. எஸ் .கிரிதரன் | ADG | சீனா | 01 - 12 செப்டம்பர் 2018 |
| 5 | சீனா மற்றும் தென் கிழக்கு ஆசியாவிற்கான B &R ஆட்சி ஒத்துழைப்பு | திரு.பி.டி ரி . பதிரான | DO | சீனா | 09 - 30 நவம்பர் 2018 |
| 6 | ‘மத்திய அயலுறவு தீர்வை முறைமை’ ஆய்வரங்கு | திரு. எஸ் .கிரிதரன் | ADG | ஜெர்மனி | 12 - 16 நவம்பர் 2018 |

## நிதிப் பிரிவு

இத் திணைக்களத்தின் குறிக்கோளினை அடையும் நோக்கில் 2018 ம் வருட மதிப்பீட்டின்படி தலைப்பு 329 நிகழ்ச்சி 01 திட்டம் 01 கீழ் மீண்டுவரும் செலவிற்கு 261,590,000 ரூபாவும், மூலதன செலவிற்கு 9,720,000 ரூபாவும் வழங்கப்பட்டது.

இத் திணைக்களத்தின் 2018 ம் வருடத்தின் தனிநபர் வருமானம், பிற மீண்டுவரும் செலவீனம் மற்றும் மூலதன செலவீனம் ஆகியவற்றின் மீதான செலவீனங்கள் பற்றிய நிதிக்கூற்று பின்வருமாறு சுருக்கி தரப்படுகிறது.

| விபரம் | மதிப்பீடு ( Rs Mn) | ஒதுக்கீடு ( Rs Mn) | குவிந்த செலவீனம்( Rs Mn) | |
|---|---|---|---|---|
| | | | உண்மைச் செலவீனம் | செலவீனம் % |
| மீண்டுவரும் செலவீனம் | 261.59 | 258.40 | 128.20 | 50% |
| மூலதன செலவீனம் | 9.72 | 12.90 | 1.37 | 11% |
| **மொத்தம்** | **271.31** | **271.30** | **129.57** | **48%** |

## ஐய வினாக்களுக்கான பதில்கள்

கணக்காய்வாளர் திணைக்களம் உள்ளக கணக்காய்வு பிரிவு என்பவற்றால் எழுப்பப்பட்ட ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டன. மேலும் அவசியமான பலவீனங்களைச் சரிபார்க்கும் வகையில் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டடிருந்தன.

## 8.0 திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவு.

இப் பிரிவு இத் திணைக்களத்தின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், முன்னேற்ற அறிக்கை என்பவற்றைத் தாயாரிப்பதை பொறுப்பாகக் கொண்டிருக்கிறது. வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் தயாரித்து பாராளுமன்றத்திற்கும் சமர்பிக்கிறது. ஏனைய திணைக்களங்களின் வருடாந்த அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பதற்காக அவசியமான தரவுகள் மற்றும் தகவல்களைக் கோரும்போது வழங்கியும் வைக்கிறது. மேலும் சகல திணைக்களங்களுடனும் அமைச்சுகளுடனும் ஒருங்கிணைப்பைப் பேணுவதுடன் ஏனைய அரச நிறுவனங்களுடன் ITMIS இன் முடிவுநிலை பயனர்களுக்கான பயிற்சி நிகழ்வுகளை அமுல்படுத்தவும், அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் என்பனவற்றை கண்காணித்து, மதிப்பீடு செய்யவும் செய்கிறது. மேலும், இடையிடையே எழும் ஏனைய கடமைகளிலும் பொறுப்புகளிலும் பங்கெடுத்துக்கொள்கிறது. திட்டமிடல் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட சகல கடமைகளும் 2018 ம் வருடத்தின் செயற்பாட்டு திட்டத்தின் படியே அமைந்துள்ளது.

தயாரித்தவர்:

நிமாலி ஜயவர்தன

உதவி திட்டப் பணிப்பாளர்

உறுதிப்படுத்தியவர்

எஸ் .எச் . ஹரிஷ்சந்திர

பணிப்பாளர் நாயகம்

தகவல் தொழில் நுட்ப முகாமைத்துவ திணைக்களம்

நிதி அமைச்சு